# கலித்தொகையில் காமன் பற்றிய செய்திகள்

முனைவர். க. தனலெட்சுமி,
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை (சுயநிதி)*
*நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,*
*மதுரை – 625019*

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டையக் காலத்திலிருந்து இன்று வரையிலும் இறைவழிபாடு நடந்துக் கொண்டுதான் உள்ளன. பல்வேறு மதத்தினர் தங்கள் முன்னோர் வழிப்பட்ட கடவுளை வழிபடுகின்றனர் அது இன்று வரை தொடந்து வழிபடுவதை காணலாம். இந்து கடவுள்களாக சிவன், திருமால், முருகன், கொற்றவை போன்ற தெய்வங்கள் வழிபடுவதை காணலாம். சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களான கலித்தொகையில் காமன் என்ற கடவுளை மக்கள் எவ்வாறு வழிப்பட்டனர் என்றும், காமன் செயல்பாடு, அவன் மேற்கொண்ட சாபம், பல்வேறு பெயர்கள் போன்றவை பற்றிய செய்திகள் உள்ளவையாக அமைகின்றன.*

**முன்னுரை**

சங்க இலக்கியம் மனித இனத்தின் கலைநயத்தோடு விளக்குவன. தமிழர் தம் பண்பாட்டு அடையாளமாக திகழ்பவை சங்க இலக்கியம் ஆகும். எட்டுத்தொகையில் கலித்தொகை மட்டுமே கலிப்பாவினால் இயற்றப்பட்ட தொகை நூலாகும். இந்நூலில் உள்ள சில செய்யுட்கள், உரையாடல் முறையில் அமைந்துள்ளன. சில செய்யுட்கள், சிறுகதை போலவும், நாடகக் காட்சிகள் போலவும் காணப்பெறுகின்றன. குறிஞ்சிக் கலியில் உள்ள 'சுடர்த்தொடீஇ கேளாய்'[1] என்று தொடங்கும் செய்யுள் சிறுகதைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். தொல்காப்பியர் காலத்தில் மாயோன், சேயோன், சிவன், கொற்றவை, வருணன் போன்ற தெய்வங்கள் மக்கள் சமயம் என்ற பாகுபாடு இல்லாமல் தங்கள் நிலங்களுக்கு ஒரு தெய்வம் என எண்ணிங்கொண்டிருந்தனர். முல்லை நில மக்கள் மாயோன் என்றும், மருத நில மக்கள் வேந்தன் என்றும், நெய்தல் நில மக்கள் வருணன் என்றும், குறிஞ்சி நில மக்கள் கடவுளுக்கு முருகன் என்றும் பெயரிட்டு அழைத்து வழிப்பட்டார்கள். மதம் என்ற சொல்லுக்குக் கொள்கை, கோட்பாடு, மகிழ்ச்சி, செருக்கு, வலி, சாரம், தேன்'' என்று விளக்கம் தருகிறது கழகத்தமிழ் அகராதி. சமயம் என்ற சொல் பல்வேறு நிலவினாலும் தெளிவான கருத்து ஒன்று நிலவுகிறது. அது மனிதனை ஒழுக்க நெறியில் செலுத்துவது மற்றும் கட்டுப்படுத்துவது என்பதாகும். பிற தொகை நூல்களில் இடம்பெறாத 'காமன் வழிபாடு' பற்றி கலித்தொகை கூறுகிறது. தொல்காப்பியத்தில் 'காமம்' என்றும் சங்க இலக்கியத்தில் 'காமன்' என்ற சொல்லாட்சியையே கையாண்டுள்ளன. ''தாராகாசுரன் நான்முகனிடம் பெற்ற பெருவரங்களால் அசுரர்க்கு அரசனாகித் தேவர்களைப் பெரிதும் கொடுமைப்படுத்தினான். துன்பந்தீர்க்கத் தேவர்கள் நான்முகன், இந்திரன் ஆகியோரை நாடினர். தேவர்களின் வற்புறுத்தலுக்கும், வேண்டுதலுக்கும் இணங்கி மன்மதன் யோக மூர்த்தியாய்த் தலத்திலிருக்கும் சிவபெருமான் மீது காமக்கணைகளைத் தொடுத்தான். மலரம்புகள் பட்ட இறைவன் தவம் கலைந்தது. இறைவன் சினங்கொண்டு நெற்றிக்கண்ணைத் திறந்தார். அக்கண்ணில் இருந்து புறப்பட்ட தீயில் காமன் எரிந்து சாம்பலானான் காமனின் மனைவி இரதி கதறியழுது சிவபெருமானை அணுகி கணவனை மீட்டுத்தர வேண்டினாள். சிவபெருமான் இவன் உனக்கு மட்டும் உருவத்துடனும், மற்ற தேவாதி தேவர்களுக்கு அரும்பமாகவும் இருப்பான் என வரம் தந்தார். அருவமான நிலையில் அங்கமற்றவன் என்பதால் அனங்கன் என்றும் மன்மதனுக்கு ஒரு பெயர் ஏற்பட்டது''[2] என்கிறார் ஸ்ரீபிரேம் குமார். கலித்தொகையில் காமன் பற்றிய செய்தி, மக்கள் வழிப்படும் முறையினையும் காணலாம்.

**சங்க இலக்கியத்தில் காமன் என்ற சொல்**

காமன் என்ற சொல் காமம் என்ற சொல்லிருந்து வந்தது. காமம் என்பதற்கு இச்சை, சிற்றின்பம், ஆசை, விருப்பம் என்று தமிழகராதி விளக்கமளிக்கின்றது. இச்சொல் இலக்கிய வழக்கில் மன்மதனையும், உலக

வழக்கில் சிற்றின்பத்தையும் குறிப்பதாகவே அமைகிறது. முதலில் அழகு தெய்வமாக சொல்லபடும் முருகனை மக்கள் வழிபடுகின்றனர். முருகனுக்கு அடுத்த நிலையில் இணையான அழகு நிலையில் மன்மதனை கூறுவதாக ஸ்ரீபிரேம் குமார் கூறுகிறார். சங்க இலக்கியத்தில் காமன் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் கலித்தொகை, பரிப்பாடல் போன்ற நூல்களில் காணப்படுகின்றன. காமவேள் (பரி 18), (கலித். 26), காமன் (பரி 11), காமர் (கலி.94), சலப்படையான் (பரி.6), சுறாகொடியான் (கலி.147) மாரன் ஒப்பார் (பரி 8, 119) போன்ற பெயர்கள் மன்மதனைக் குறிக்கின்றன. காதலுக்குக் காரணமாக ஒரு கடவுளையும், கூடக் கருதவோ, கற்பிக்கவோ, விரும்பாத சங்கத் தமிழர் தம் உணர்வு வெளிப்படுகிறது. காதலுக்குக் காரணம் இன்னோரு தெய்வம் எனக் கருதக் சங்க அகத்திணையாருக்கு மனம் இடம் தரவில்லை எனலாம்'"[3] என்கிறார் ஜெபக்கனி செல்வராஜ், காமனின் தம்பி சாமன் ஆவான். கலித்தொகையில் சாமனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. காமன் ஆரியக் கடவுள், மருதக்கலியில் (29) 'காமனாரும்' அவர் தம்பி, 'சாமனாரும்' வருகின்றனர். இப்பெயர்களையும் சங்க நூல்களில் காணமுடியாது. காமனைப் பற்றிய செய்திகள் பிற்காலத்திய சமண பௌத்த காவியங்களிலும் ஆண்டாள் பாசுரங்களிலும் பெருங்கதையிலும் காணப்படுகின்றன. எனவே, 'காமன்' என்னும் கடவுளும் அவன் சாமனா் 'தமையன்' என்னும் செய்தியும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கடைச்சங்க காலத்துப் பழம்பாடல்கட்குப் பிற்பட்டனவே என்பது தவறாகாது[4] என்கிறார் கே.கே.பிள்ளை.

**"காமனார் நடக்கும் நடைகாண்" (கலி, 94)**

என்ற பாடல் வரிகளில் மன்மதனின் தம்பியாகிய சாமனின் நடையை பற்றிய செய்திகள் உள்ளன.

**காமனின் கோவில், விழா**

காமக்கடவுளாகிய மன்மதன் கரும்பை வில்லாகவும், வண்டுகளை நாணாகவும், மலர்களை அம்புகளாகவும், மங்கையரைப் படையாகவும், தென்றலைத் தேராகவும் கொண்டு விளங்கும் அழகானவான்[5]

**"படையிடு வான்மன் கண்டீர்காமன் மடையடும்**
**பாலோடு கோட்டம் புகின்" (கலி, 109)**

என்ற பாடல் வரிகளில் காமன் கோயிலைக் கோட்டம் என்பதை அறியலாம். காமனுக்கு பால் படைக்கப்பட்ட குறிப்பு இப்பாடலின் வழி அறியலாம்.

**"நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்**
**தேன்இமிர் காவில் புணர்ந்திருந்து ஆடுமார்,**
**ஆனா விருப்போடு அணிஅயர்ப காமற்கு**
**வேனில் விருந்தெதிர் கொண்டு" (கலி.95, 65-68)**

என்ற பாடலில் இளவேனிற் காலம் வருகிறது. மன்மதன் விழா நடைபெற இருக்கிறது. அதை வரவேற்று மதுரையில் மகளிரும் ஆடவரும் வண்டுகள் ஒலிக்கும் சோலைகளில் கூடியிருந்து விளையாட அணிகளை அணிந்து கொள்வர். என்று காமவிழா நடைபெறும் சிறப்பினை காணமுடிகிறது.

**"வில்லவன் விழவினுள், விளையாடும் பொழுதன்றோ" (கலி -35 -14)**

ஏன்ற பாடல் வரிகளில் வையை ஆற்றில் பூக்கள் நிரம்பிய ஆற்றிடைக் குறையில் காதலனும் காதலியுமாகக் கூடிய இணைகள் மன்மதன் விழாக் கொண்டாடி விளையாடும் காலம் இதுவல்லவா? தலைவன் வருவதாக சொன்ன காலம் மன்மதன் விழாக்காலமாக தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள்.

**காமனின் அம்பு,**

மன்மதன் உன்னைக் காண்போர் மீது மலர் அம்பு எய்து காமத்தையும், உண்டாக்குவான் என்று கூறி தலைவன் தலைவியின் அழகினை வர்ணித்து கூறுகிறான்.

**"காமனும் படைவிடு வனப்பினோடு" (கலி 108)**

என்ற பாடல் வரிகளில் காமன் மலா் அம்பினை கொண்டு உள்ளான் என அறியமுடிகிறது. ‘‘மன்மதன் போருக்குரிய படைஞர், மங்கையர், மல்லிகை மலா், வாள் - தாழைமடல், வில் - கரும்பு, நாண் - கரும்பு (வண்டு) அம்புகள் - தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என ஐந்து மலா்கள் , பாசறை – மலா்பொழில், ஐங்கணைகளில் தாமரை காம நினைவையும், மா- பசலையும் அசோகு உணவை வெறுத்தலையும், முல்லை படுக்கையிற் கிடத்தலையும், நீலம் மரணத்தையும் உண்டாக்கும்’’ என்ற கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது. இதே போன்று மற்றொரு பாடலில் காமன் தன் அம்பை படையாக கொண்டுள்ளான் என்பதை,

**“…….. காமனது**

**ஆணையால் வந்த படை**

**காமக் கடும்பையின் தோன்றினேற்கு ஏமம்’’(கலி. 139, 22-25)**

என்ற பாடல் வரிகளில் மன்மதன் விடுத்த படையென வந்த அவள் என தலைவியை நினைத்து தலைவன் கூறுகின்றான்.

**காமனின் கொடுமை**

தலைவனை காணாத தலைவி காலதேவனிடம் மன்மதன் எனக்குச் செய்யும் கொடுமைகளை நீ உன் ஒலையில் எழுதி வைத்துக் கொண்டு அவனைத் தண்டிப்பாய். ஆனால் அவன் எம் வழிபடு தெய்வம் அதனால் அவனைத் தண்டிக்காதே. என் நோய் நீங்காது நீயும் மன்மதன் மீது கொண்ட சினம் தணிக.

**“சுறாஅ எருமைய காடுஇறந்தான் கொல்லோ?**

**…………………………………………….**

**சுறாஅ கொடியான் கொடுமையை, நீயும்’’ (கலி. 147)**

என்ற பாடலில் மன்மதனின் கொடுமையால் கண் உறக்கம் கொள்ளவில்லையாயின் கதிரவனே! நீ அவனை நனவிலாவது எனக்குக் காட்டு அவ்வாறு காட்டாயாயின் தலைவன் என்னை நினைத்து பைத்தியமாகி பனை மரக்குதிரையாகிய மடலில் ஏறி வர, மலா் அம்புகளை அவன் மீது தொடுக்கும் படி நான் மன்மதனைப் பாதம் தொட்டு வேட்டுவேன் என்றாள்.

**“விறல்இழை யவரோடு மறந்துஅமைகு வான்மன்னோ’’ (கலி 30 – 14)**

தணியாத காமநோயுடன் உன் தகையவள் துன்புறுகின்றாள். பகைவா் போல நடுங்குகின்றாள். அவள் மகிழ நீ உன் தேரில் செல்க என்று பாணன் தலைவியின் நிலையை தலைவனுக்கு சொல்கிறான்.

**முடிவுரை**

காமனின் கோயிலை கோட்டம் என்றும், காமனின் தந்தை திருமால் ‘‘நெடியோன் மகன்’’ என்பதையும் குறிப்பிடுவதை காணலாம். காமனின் தம்பியாகிய சாமனைப் பற்றியும், காமனின் மீன்கொடி இருப்பதையும், வில் இருப்பதையும் பாடல்களின் வழி அறியமுடிகிறது. இளவெனில் காலத்தில் ஆண்களும் பெண்களும் காமன் விழாவில் இன்பமாகக் கொண்டாடி உள்ளனா் என்பதை அறியமுடிகிறது. பெண்ணொருத்தி காமன் கால்களைக் கட்டிக்கொண்டு கணைகளைக் கேட்பதாகக் குறிப்புகள் உள்ளன. மேலும் காமன் விழாவினை வேனில் விருந்து என்றும் கலித்தொகையில் பாடல்களின் வழி அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1] கலித்தொகை 51 (பாடல்)

[2] ஸ்ரீபிரேம் குமாா், மன்மதன் ஒப்பாாி - ஓலைச்சுவடி, ப. 11

[3] ஜெபக்கனி செல்வராஜ், மன்மதன் ஓா் ஆய்வு ப.5

[4] கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும், பண்பாடும்

[5] ஸ்ரீபிரேம் குமாா், மன்மதன் ஒப்பாாி - ஓலைச்சுவடி, ப. 25